**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


நாள்: 29.06.2021

**பெறுநர்**

**மாண்புமிகு திரு. செந்தில் பாலாஜி அவர்கள்**
**மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர்**
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை- 600 009

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,**
**144, அண்ணாசாலை, சென்னை 600 002**

**மற்றும் ஊதிய பேச்சுவார்த்தைக்குழு உறுப்பினர்கள்**

- இயக்குநர்/ நிதி TANGEDCO அவர்கள்
- இயக்குநர்/ உற்பத்தி TANGEDCO அவர்கள்
- இயக்குநர்/ விநியோகம் TANGEDCO அவர்கள்
- இயக்குநர்/ தொடரமைப்பு TANTRNSCO அவர்கள்
- செயலாளர்/ TANGEDCO அவர்கள்
- தலைமை பொறியாளர் /பணித்தொகுதி TANGEDCO அவர்கள்
- தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலகம்/ பொது / TANGEDCO அவர்கள்

**ஐயா**

**பொருள் : தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர்கள், அலுவலர்கள்,பகுதி நேர தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் ஆகியோருக்கு 01.12.2019 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு - படிகள் - நிரந்தரம் மற்றும் சமூகப்பாதுகாப்பு நடவடிக்கைகள் இதர சலுகைகள் சம்மந்தமான கோரிக்கை பட்டியல் மீது பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடத்தி தீர்வுகாண வேண்டுதல் - தொடர்பாக**

**பார்வை : 1. மின் ஊழியர் மத்திய அமைப்பு கடிதநாள்**
**2. வாரிய உத்தரவு** (Per) CMD TANGEDCO Proceedings No.224 dt 07.12.2019

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் 83000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள், பகுதிநேர ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் 01.12.2019 முதல் ஊதிய உயர்வு உள்ளிட்ட சலுகைகள் சமூகபாதுகாப்பு ஒப்பந்த ஊழியர் பணி நிரந்தரம் உள்ளிட்டவைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமூகமான ஒப்பந்தம் காண வேண்டும் என்ற நோக்கோடு பட்டியலை இணைத்துள்ளோம்.

நாடு முழுவதும் ஏறிவருகின்ற விலைவாசி உயர்வு என்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சமீப காலங்களில் பேட்ரோல், டீசல், எரிவாயு உருளை ஆகியவற்றின் விலை அனுதினமும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. இதனால் பொருள்களின் விலை உயர்ந்துள்ளது. தமிழக மக்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். இந்த பாதிப்பு மின்வாரிய பணியாளர்களையும் விட்டு வைக்கவில்லை.

மின்வாரியத்தில் பணியாற்றி வரும் ஊழியர்களுக்கு நான்கு ஆண்டுகளக்கு ஒருமுறை ஊதிய உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும். வாரிய நிர்வாகத்தால் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தைக்கான குழு பார்வை இரண்டில் கண்ட குறிப்பாணை வாயிலாக அமைக்கப்பட்டது.

இந்தக்குழு அமைக்கப்பட்டு ஓராண்டு கடந்த நிலையில் பேச்சுவார்த்தை துவக்கப்படவில்லை. இடையில் கொரோனா தொற்று நோய் காரணமாக தேசம் ஒரு அசாதாரண சூழ்நிலையில் இருந்த காரணத்தால் மின்வாரிய பணியாளர்களும் அரசுடன் இணைந்து நின்று மக்கள் சேவையை அளித்து வந்தனர்.

மின்வாரியத்தில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் 1,38,046 ஆனால் தற்போது 83,900 பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். காலிப்பணி இடங்களோ 54,000-க்கும் மேல் காலிப்பணி இடங்களாக உள்ளன. இதில் 3,07,54,000-க்கும் மேற்பட்ட மின்நுகர்வோர்களுக்கு சேவை செய்யும் ஆரம்பக்கட்ட பதவிகளான, உதவியாளர் மற்றும் கம்பியாளர், 31,000 பதவிகளும், கணக்கீட்டாளர் பதவியில் 3500-க்கும் மேற்பட்ட பணி இடங்களும், அதே போல் 1500-க்கும் மேற்பட்ட உதவிப்பொறியாளர் பணி இடங்களும் காலியாக உள்ளன. கூடுதல் பணிச்சுமையை மின்வாரிய பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

கடந்த நான்கு நிதியாண்டு காலங்களில் மின்சாரத்தை விநியோகித்த வகையில் 2016-17 ஆம் ஆண்டுகளில் 43964.40/- கோடிக்கும் அதன் பின்னர் 2019-20-ல் தொடர்ச்சியாக ரூ. 49,413.24 கோடிக்கும் என மின்சாரரத்தை விற்பனை செய்துள்ளது. ஆனால் இதே காலத்தில் பணியாளர்களின் ஊதியம், உள்ளிட்ட நலன்களுக்காக 2019-20-ல் 18.8/-சதவீதம் மட்டுமே செலவு செய்துள்ளது. ஆனால் தனியார் மின் உற்பத்தியாளர்களிடத்தில் 2016-17-ம் ஆண்டில் 35692.33/- கோடியில் மின்சாரத்தை கொள்முதல் செய்தது, 2019-20 -ம் ஆண்டில் ரூ.44182.47 கோடிக்கு மின்சாரத்தை கொள்முதல் செய்துள்ளது.

மாநில மின்வாரியத்திற்கு சொந்தமான உற்பத்தி நிலையங்களை முழுவீச்சில் நவீனப்படுத்தி உற்பத்தி செய்வித்தால் தனியார் முதலாளிகளிடம் மின்சாரத்தை அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டிய நிலை இருக்காது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழக மின் வாரியத்தில் கடந்த 22.02.2018-ல் ஏற்பட்ட ஊதிய உயர்வு மற்றும் வேலை பளு ஒப்பந்தத்தில் ஒவ்வொரு ஆண்டும், கூடுதலாக வழங்கப்பட்ட மின் இணைப்புகளுக்கேற்ப நிறுவப்பட்ட மின் மாற்றிகளுக்கேற்ப புதிய பதவிகளை அனுமதித்து பதவி உயர்வுகள் மூலமாகவும், புதிய ஊழியர்களை தேர்வு செய்து பணி நிரப்பப்படும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் புதிய பதவிகளுக்கான அனுமதியும் ஏற்கனவே உள்ள காலிப்பணி இடங்களை நிரப்புவதற்கான பணி நடைபெறவில்லை என்பதை கவலையோடு குறிப்பிட விரும்புகிறோம்.

பகுதி நேர பணியாளர்களில் தகுதி உள்ளவர்களுக்கு உள்முகத் தேர்வில் வாய்ப்புகள் மறுக்கப்படுவதும் தொடர்ந்துவலியுறுத்தியும் அதே நிலை நீடித்து வருகிறது.

கணக்கீட்டாளர்கள், கம்பியாளர்கள், உள்ளிடோர்களுக்கு பதவி உயர்வுகள் கிடைத்தும் கீழ்மட்ட பணியை செய்யும் நிலையே தொடர்ந்து நீடித்து வருகிறது. இதனால் மிகுந்த மனசோர்வுடன் மின்வாரிய பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தமிழக மின்வாரியத்தில் ஆயிரக்கணக்கான அனுமதிக்கப்பட்ட பதவிகள் காலிப்பணியிடங்களில் ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தி அவர்களிடத்தில் வேலை வாங்கப்படுகிறது. இவர்களை ஒப்பந்த தொழிலாளர்கள் என அங்கீகரித்து 22.02.2018-ல் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூ.380/- தினக்கூலியாக வழங்கிட மின்வாரிய நிர்வாகம் மறுத்து வருகிறது. மின்வாரியத்தில்

வளர்ச்சியில் அரும்பணியாற்றும் அனல்,புனல், பொதுக்கட்டுமான வட்டம் மற்றும் மின் விநியோக வட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு மின்வாரிய நிர்வாகமே முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ளபடி ரூ.380/-ஐ நேரிடையாக வழங்கி பின்னர் ஏற்படும் காலிப்பணி இடங்களில் படிப்படியாக பணி நிரந்தரம் செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்க வேண்டுகிறோம்.

எனவே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் இத்துடன் இணைத்துள்ள கோரிக்கைப் பட்டியல் மீது பேச்சுவார்த்தை நடத்தி ஊதிய உயர்வை, வழங்குவதற்கும், அதற்கான பேச்சுவார்த்தையை தொடர்ந்திடவும் நடவடிக்கை எடுப்பதோடு ஒரு சுமூகமான உடன்பாடு எட்டிய பின்னரே ஒப்பந்தம் காண வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

**நன்றி** !

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்